இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் V
இறுதிப்பரீட்சை – **2017/2018**
சுற்றாடல் சட்டம் - **LWU3314 / LLU5811**
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி : 28.02.2020 நேரம்: பி.ப. 02:00 – பி.ப. 05:00

மொத்த வினாக்களின் எண்ணிக்கை :-07

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

1. டிரிம் லாண்ட் என்பது ஒரு அபிவிருத்தி அடைந்து வரும் நாடு ஆகும் என்பதுடன் அதன் அரசாங்கம் அடுத்த பத்து வருட காலங்களுள் அபிவிருத்தி அடைந்த நாட்டின் அந்தஸ்தை அடைய தீர்மானித்து உள்ளது. இந்த இலக்கை அடைய, டிரிம் லாண்டின் அரசாங்கம், அதன் தலைநகரமான ராஜ்புரவில் பல அபிவிருத்தி செயல் திட்டங்களை ஆரம்பித்தது. இது, இச் செயல் திட்டங்களில் கிடைக்கத்தக்க வேலை வாய்ப்புகளின் காரணமாக, நாட்டின் பிற பாகங்களில் இருந்து தலைநகரத்திற்கு பாரிய குடிபெயர்விற்கு வழியமைத்தது. நகரத்தின் இவ் அதிகரித்த சனத்தொகை, வாகங்களின் மாசு, டீசல் மின் ஆக்கிகளில் இருந்தான வெளியேற்றம், கட்டுமான தளங்களில் இருந்து வரும் தூசு, குப்பையை எரித்தல் மற்றும் சட்ட விரோத தொழிற்துறை நடவடிக்கைகள் என்பன காரணமாக, அபாயமூட்டும் மட்டங்களில் ராஜ்புரவில் வளித் தரம் குறைந்துள்ளது.

   அண்மையில் ராஜ்புர, கண்களில் எரிவை ஏற்படுத்துவதும், பார்வையிடக் கூடியத் தன்மையை மட்டுப்படுத்தும் பருமனான பழுப்பு நிற பனிப்புகையைக் கொண்டதுமான, மிக மோசமான மாசடைவு காலங்களுள் ஒன்றை சந்தித்துள்ளது. வளியில் எடுத்துச் செல்லப்படும் துகள்களை கணிக்கும் வளி தரச் சுட்டெண் ஆனது, உலக சுகாதார திணைக்களத்தால் ஆரோக்கியம் என நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லையிலும் பத்து தடவை அதிகமாக பதிவு செய்துள்ளது. தெரிவிக்கப்படுவதன் பிரகாரம், ஆயிரக்கணக்கான மக்கள் சுவாச நோய்த் தொற்றுக்கள், உடற்பயிற்சியின் போது அல்லது வெளிப்புற நடவடிக்கைகளின் போது சுவாசித்தலில் சிரமங்கள் என்பவற்றால் பாதிப்புற்றுள்ளதுடன், குழந்தைகள் தோல் எரிச்சலால் பாதிப்புற்று வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். டிரிம் லாண்டின் உள்நாட்டு பத்திரிகை ஒன்றால் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம், ராஜ்புரவில் இருந்து 34 குழந்தைகள் தற்போது, தரம் குறைந்த வளியின் காரணமாக நுரையிரல் பாதிப்பிற்கு உள்ளாகி வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றது. மேலும் அது, இத்தகைய சூழல் குழந்தைகளின் நோய் எதிர்ப்பு அமைப்பை பாதிக்கக் கூடியது என்பதுடன், புற்று நோயிற்கான ஆபத்தையும் அதிகரிக்கும் எனக் கூறுகிறது.

மருத்துவர்கள் சங்கத்தின் ராஜ்புர கிளை ஆனது, அரசாங்கம் மற்றும் தொடர்புடைய அதிகார சபைகள் என்பனவற்றுக்கு எதிராக, வளிமாசடைவு மற்றும் பிரஜைகளது ஆரோக்கியத்தை பாதுகாக்கத் தவறியமை என்பவற்றுக்காக வழக்குத் தொடுக்க விரும்புகிறது.

டிரிம் லாண்டின் சட்டமுறைமை மற்றும் சட்டங்கள் என்பன, இலங்கையை ஒத்தன எனக் கருதுக. மருத்துவர்களது சங்கத்திற்கு, இது தொடர்பில் பொது நலவழக்கு ஒன்றை வெற்றிகரமாக முன்வைக்க முடியுமா என அறிவுறுத்துக.

(25 புள்ளிகள்)

2. பின்வரும் கூற்றுக்களை ஆராய்ந்து, தீர்க்கப்பட்ட வழக்குகளில் இவற்றை நீதிபதிகள் எவ்வாறு கையாண்டுள்ளனர் என்பது குறித்து நோக்கவும். உமது ஆராய்வு நியதிச் சட்டங்களில் இருந்து பொருத்தமான பிரிவுகளுடனும், தீர்ப்புச் சட்டங்களுடனும் ஆதாரப்படுத்தப்பட வேண்டும். நீர், இலங்கையில் இருந்தும் பிற நியாயாதிக்கங்களில் இருந்தும் உதாரணங்களை உமது விடையில் குறிப்பிக.

i. 'அபிவிருத்தி செயற்றிட்டங்கள் ஆனவை பௌதீக சுற்றாடலை மட்டும் பாதிப்பதில்லை, மாறாக சமூகத்திலும் அதன் உறுப்பினர்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறன'

(12.5 புள்ளிகள்)

ii. 'அபிவிருத்தியும் சூழலியலும் ஒன்றுக்கொன்று முரணானவை எனும் பாரம்பரியக் கருத்தேற்பு, தொடர்ந்தும் ஏற்கப்படத் தக்கதன்று'

(12.5 புள்ளிகள்)

3. பின்வரும் வழக்குளில் நிறுவப்பட்ட சட்டக் கொள்கைகள் மற்றும் கருத்தேற்புகள் என்பனவற்றை விளக்குக.

(a) *Juan Antonio Oposa and others* v. *The Honourable Fulgencio S Factoran and another (1994) Vol.1(3) SAELR 113*

(b) *MM Khalid and Three Others* v. *Chairman, Sri Jayawardenepura- Kotte Urban Council (1996) Vol.1(3) SAELR 62*

(c) *MC Mehta* v. *Kamal Nath and* Others (1997) Vol.4(3) SAELR 122(1997) 1 SCC 388

(d) *Nair* v. *Costa 28 N.L.R.385*

(e) *New Zealand* v. *France (1996) Vol.3(1&2) SAELR 7*

(**5x 5** = 25 புள்ளிகள்)

4. ‘47ஆம் இலக்க 1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடற் சட்டம் ஆனது மத்திய சுற்றாடல் அதிகார சபையை, தேசிய சுற்றாடல் கொள்கை மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் தொடர்புடைய ஆய்வுகள், கல்விசார் மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பனவற்றுடன் தொடர்புடையப் பரிந்துரைகளை மேற்கொள்ளும் கடமைகள், செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் என்பனவற்றுடன் நிறுவியுள்ளது. எவ்வாறாயினும், சட்டம் ஆனது மத்திய சுற்றாடல் அதிகார சபையை, சுற்றாடல் மாசடைவு மற்றும் சுற்றாடலை சீரழித்தல் அல்லது சுற்றாடலை மாசுபடுத்தும் அல்லது சீரழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களைத் தடுத்தல் என்பனவற்றை திறனுள்ள வகையில் கட்டுப்படுத்தும் கடமை அல்லது அதிகாரம் ஆகியனவற்றுடன் அமைக்கவில்லை’

*Ravindra Gunawardena Kariyawasam, Chairman, Centre for Environment and Nature Studies Vs Central Environment Authority and others, SC FR Application No.141/2015,pg 12.*

இத்தீர்ப்பிடைக் கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? மாசுபடுத்தும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல் மற்றும் ஒழுங்கமைத்தல் என்பனவற்றில் 56ம் இலக்க 1988 ஆம் ஆண்டின் சட்டம் மற்றும் 53 ஆம் இலக்க 2000ஆம் ஆண்டின் சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்ட 48 ஆம் இலக்க 1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடற் சட்டத்தின் (NEA) செயற்திறனை நுணுக்கமாகக் கணிக்க. இது தொடர்பில் சட்டத்தின் செயற்றினை விருத்தி செய்வதற்கான பரிந்துரைகள் உமது விடையில் உள்ளடக்கப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

5. மவுலங்கா என்பது, உலகில் முதலீட்டாளர்களுக்கு மிகவும் சாதகமான நாடுகளுள் ஒன்றாக பட்டியல் இடப்பட்டுள்ள விருத்தி அடைந்து வரும் நாடு ஒன்று ஆகும். விருத்தியடைந்த நாடு ஒன்றை அடிப்படையாகக் கொண்ட ‘பிங் பிரதர்ஸ் ரிசோர்ஸ் பாட்னர்ஸ்’ எனும் ஒரு பாரிய முதலீட்டு நிறுவனம் ஆனது மவுலங்காவின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள சௌபாக்கியா என்ற குடியேற்றத்தில் அப்பட்டேட் கனிப் பொருளை உபயோகித்து பொஸ்பேட் உரம் உற்பத்தி செய்யும் கூட்டு முயற்சி ஒன்றில் முதலிட தீர்மானித்தது. சௌபாக்கியா இயற்கை வளம் மிகுந்ததுடன், புராதன மவுலங்காவின் இரண்டாம் தலைநகராகவும் திகழ்ந்துள்ளது. மேலும் இது மவுலங்காவின் பழைமை வாய்ந்த மனித நாகரிகத்தின் மூலமாகவும் ஏற்கப்பட்டுள்ளதுடன், இங்குள்ள மக்கள் தமது புராதன வகையிலான செதுக்கல் வேலைப்பாட்டைத் தொழிலாகத் தொடர்ந்து அமைதியான வாழ்க்கையை நடாத்துகின்றனர்.

பிங் பிரதர்ஸ் ரிசோர்ஸ் பார்ட்னர்ஸ் இச்செயல் திட்டத்தை எட்டு மாதங்களுள் நிறைவு செய்யத் தீர்மானித்ததுடன், குறித்துரைக்கப்பட்ட நடபடி முறையின் மூலமாக தொடராது செயல் திட்டத்தை ஆரம்பிக்க மவுலங்காவுடன் கலந்தாலோசித்தனர்.

மவுலங்காவின் செய்தி நாளிதழ்கள், பிக் பிரதர்ஸ் ரிசேராஸ் பார்ட்னரஸ இனூடான கனிப்பொருள் முதலீட்டு ஒப்பந்தம் குறித்து கட்டுரைகளைப் பிரசுரித்ததுடன், இது மவுலங்காவை அபிவிருத்தியில் அடுத்தக் கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என எதிர்வு கூறின. அண்மையில், தொல்பொருள் திணைக்களத்தால் சௌபாக்கியாவில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் கணக்கெடுப்பு ஆனது அகழ்வாராய்ச்சித் தளம் ஒன்றைத் கண்டெடுத்துள்ளதுடன், ‘உலகின் பழைமை வாய்ந்த நகர் தளங்களுள் ஒன்று சௌபாக்கியா’ எனப் பெயரிட்ட அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தது.

‘பெயார் புட்ஸ் லாயர்ஸ்’ எனும் மவுலங்காவின் சட்ட மாணவர் ஆர்வலர் குழு ஒன்று இம் முதலீட்டு முயற்சிக்கு மவுலங்கா அரசாங்கம் அங்கீகாரம் தெரிவிப்பதில் இருந்து தடுப்பதற்கு விரும்புவதுடன், உமது அறிவுரையை நாடுகிறது. மவுலங்காவின் சட்டமுறைமை ஆனது இலங்கையின் சட்ட முறையை ஒத்தது எனக் கருதி, அவர்களுக்கு அறிவுறுத்துக.

(25 புள்ளிகள்)

6. “ தேசிய மற்றும் சர்வதேச இரு மட்டங்களிலும் சுற்றாடற் பிணக்குகள் மற்றும் மனித உரிமைகள் என்பனவற்றிற்கு இடையிலான இடைத் தொடர்பின் இனம் காணல் ஆனது, வழக்குச் சட்டங்களின் ஒரு முக்கிய பாகத்திற்கு எழுச்சியை அளித்துள்ளது. அத்தியாவசியமான சுற்றாடற் பிணக்குகள் மீதான வழக்குகள் அதிகளவு தேசிய அரசியலமைப்புகளின் அடிப்படை உரிமைகள் உறுப்புரைகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. மாறாக, பல மனித உரிமைகள் வழக்குள் ஆனவை, சுற்றாடல் தராதரங்களை நிறுவவும், சுற்றாடல் வளங்களை பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.”

இக்கூற்றை உமது விடையை இலங்கை மற்றும் பிற நாடுகளின் நீதிமன்றங்களில் தீர்க்கப்பட்ட வழக்குச் சட்டங்களுடன் எடுத்துக் காட்டி விளக்குக

(25 புள்ளிகள்)

7. சமகி மாவத்த என்பது சதுடுபுரவில் உள்ள 30 வீடுகளைக் கொண்ட குடியிருப்பு வீதி ஆகும். பாலா மற்றும் ருமிந்த ஆகியோர் சமகி மாவத்தயில் அருகருகே உள்ள வீடுகளில் வசிக்கும் அயலவர்கள் ஆவர். பாலா, அவசியமான அனுமதிகளைப் பெறாது, ருமிந்தவின் வீட்டின் அருகில், தன் வீட்டில் கோழிப் பண்ணை ஒன்றை ஆரம்பித்தான். தொழில் ரீதியில், வைத்தியரான ருமிந்த தன் வீட்டில், தனியார் மருத்துவமனை ஒன்றை தனது சுற்றுபுறத்தில் உள்ளோருக்கான இலவச மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு நடாத்துகிறார். பாலாவின் பண்ணையில் இருந்து வரும் துர்நாற்றம் மற்றும் கோழிகளின் சத்தம் என்பன அவரது குடும்பத்திற்கும் நோயாளிகளிற்கும் இடையூறு விளைவிப்பதுடன், பொறுத்துக் கொள்ள இயலாததாக ஆகுவதை அறிந்தார்.

சமகி மாவத்தயின் வாசிகள் கோழிப்பண்ணை அங்கிருப்பது, தொல்லை மட்டும் அன்றி, கோழிப்பண்ணையில் இருந்து வரும் துர்நாற்றம் சுவாசித்தலில் சிரமத்தை ஏற்படுத்துவதால், சாத்தியமான ஆரோக்கிய ஊறு என்றும் அறிந்தனர். ருமிந்தவின் சிறிய மகளான சாரா, குறிப்பாக பாதிப்புற்றுள்ளார். சமகி மாவத்தவில் வசிக்கும் விராஜ் எனும் பல்கலைகழக மாணவன், கோழிப் பண்ணையில் இருந்து வெளியேற்றப்படும் அமோனியா வாயு காரணமாக அத்துர்நாற்றம் ஏற்படுவதாகவும், நாளடைவில் அது சுவாச செயலிழப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் கூறுகிறான்.

இச்சந்தர்பத்திற்கு பரிகாரம் அளிக்க ருமிந்த மற்றும் சமகி மாவத்த வாசிகள் ஆகியோருக்கு கிடைக்கத் தக்க நிவாரணம் குறித்து ஆராய்க. உமது விடையில் வழக்குச் சட்டங்களைக் குறிப்பிடுக.

(25 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது.